**செய்தி வெளியீடு எண்: 143** **நாள்: 24.02.2018**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் 70–வது பிறந்தநாளையொட்டி இன்று (24.2.2018) சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற உழைக்கும் மகளிருக்கு மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனங்கள் வழங்கும் விழா மற்றும் மாபெரும் மரக்கன்றுகள் நடும் விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் ஆற்றிய உரை.

---

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா
தெய்வத்தை வணங்கி,

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின்
பிறந்த நாள் விழாவில் கலந்து கொண்டு
**அம்மா இரு சக்கர வாகனத் திட்டத்தை**
துவங்கி வைப்பதற்கு அழைத்தபோது
வருகிறேன் என்று மகிழ்ச்சியோடு சம்மதித்த
மாண்புமிகு பாரதப்பிரதமர் அவர்களுக்கு
நன்றியுடன் கூடிய வணக்கத்தைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் இந்த இனிய
விழாவிற்கு வருகை தந்திருக்கிற
மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களே,
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களே,
மாண்புமிகு மத்திய இணை அமைச்சர் அவர்களே,
மாண்புமிகு மக்களவை துணைத்தலைவர் அவர்களே,
மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத்தலைவர் அவர்களே,
மற்றும் வருகை தந்திருக்கும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே,
நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே,
தலைமைச் செயலாளர் அவர்களே,
வருகை தந்திருக்கின்ற அரசு உயர் அலுவலர்களே,
தாய்மார்களே, பெரியோர்களே, பயனாளிகளே,
பத்திரிகையாளர்களே, தொலைக்காட்சி நண்பர்களே,
உங்கள் அத்தனை பேருக்கும் எனது பணிவான
வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திட்டங்களால் மக்களைக் கவர்ந்தும்,
சட்டங்களால் மக்களைக் காத்தும் நின்ற வீர சக்தி;

சினிமாத் துறையையும்; அரசியல் துறையையும்
அரை நூற்றாண்டு காலம் ஆக்கிரமித்து
தன்னைச் சுற்றியே சுழல வைத்த காந்த சக்தி;

வாழ்ந்த ஒவ்வொரு நாளும்
வரலாறாய் பதிவு பெற்ற ஆன்ம சக்தி!

தமிழ்நாடு **மாதவம்** செய்து பெற்ற மங்கையர்க்கரசி!
தமிழ்நாடு கோயில்கட்டி கும்பிடும் குல தெய்வம்!
தமிழர் வீடுகளில் தவறாமல் ஒலிக்கும் வேதமந்திரம்!

மகத்தில் பிறந்து – ஒரு யுகத்தையே வென்று,
**“என் இல்லமும், உள்ளமும் தமிழ்நாடுதான்
என் மக்களோடுதான் எப்போதும் நானிருப்பேன்”**
என்று, எப்போதும் நிகழ்காலமாய் வாழும் தெய்வசக்தி!

தமிழர் மணம் பரப்ப – தன்னையே
அரைத்து சந்தனமாய் தேய்ந்த,
தியாகத் தீபம் நடந்து சென்ற
வாழ்க்கை சுவடுகள் சிலவற்றை
கனத்த இதயத்தோடும்,
பனித்த கண்களோடும்
நீங்கள் பிறந்த இந்த நன்னாளில்
நான் நினைத்துப் பார்க்கின்றேன்.

**‘அம்மா என்றால் அன்பு’** என்ற பாடல்தான்
மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்
சினிமாவுக்காக பாடிய முதல் பாடல்.
பிற்காலத்தில் ஒட்டுமொத்த தமிழ் மக்களின்
**‘அம்மா’வாகவே** மாறினார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் சட்டமன்றத்தில் பட்ஜெட் தாக்கல் செய்கிறார்கள் என்றால்.. **அந்தப் பட்ஜெட்டின் பக்கத்திற்கு பக்கம் ஏழைகள்,**

**தொழிலாளர்கள், மீனவர்கள், விவசாயிகள், பெண்கள் ஆகிய அடித்தட்டு மக்களின் புன்னகை முகங்கள்தான் தெரியும்.**

**'ஏழை எளியோர், ஆதரவற்றோர், முதியோர்,**
**விதவைகள், நலிவுற்ற பிரிவினர் ஆகிய சமுதாயத்தின் அடிதளத்து மக்களுக்கு கைகொடுத்து,**
**அவர்களை உயர்த்த வேண்டும் என்பதில்**
**நான் அளவற்ற அக்கறை கொண்டுள்ளேன்'** என்று

மணிக்கொரு திட்டம்,
நிமிடத்திற்கு ஒரு செயலாக்கம் என்று,
விரைந்து செயலாற்றி.. தமிழ்நாட்டு மக்களை
வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் சென்றவர்
மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

**நீர்வளம் பெருகினால், நில வளம் பெருகும்**
**நில வளம் பெருகினால், உலகம் செழிக்கும் –** என்ற
புதிய மந்திரத்தை சொன்னவர் அம்மா அவர்கள்.
பொருளைச் சேமிப்பதைக் காட்டிலும்,
நீரை சேமிப்பதுதான் மிகவும் முக்கியம் என்று,
**'மழைநீர் சேகரிப்புத் திட்டத்தை'** தொலைநோக்கு பார்வையோடு செயல்படுத்தி,
உலகையே
தமிழ்நாட்டை உற்று நோக்க வைத்தவர்
மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

மாணவ மாணவியருக்கு 14 வகையான கல்வி
உபபொருட்கள், விலையில்லா மடிக்கணினி,
விலையில்லா மிதிவண்டி வழங்கும் திட்டம்,
கட்டணமில்லா பேருந்து வசதி என
மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின்
பல்வேறு கல்வித் திட்டங்களால்
**'கல்வி சிறந்த தமிழ்நாடு'** என்ற
உன்னத நிலையை தமிழ்நாடு அடைந்தது.

ஊரகப் பகுதிகளிலும் 65 கல்லூரிகளை அமைத்து
ஏழை, எளிய மாணவர்களின் உயர்க்கல்விக் கனவை
நனவாக்கியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

இதன் விளைவாக தமிழ்நாடு நாட்டிலேயே
உயர் கல்வி சேர்க்கையில் 46.9 சதவீதம்
என்ற அளவுடன் முதன்மை மாநிலமாக
விளங்குகிறது. இது தேசிய சராசரியான
25.2 சதவீதத்தை விட இரண்டு மடங்கு கூடுதலாகும்.

ஏழை படித்த பெண்களுக்கு – திருமண நிதி உதவியுடன்
8 கிராம் தங்கம் வழங்கும் திட்டம்,
மாண்புமிகு முதலமைச்சரின் விரிவான
மருத்துவக் காப்பீட்டுத்திட்டம்,
சமூகப் பாதுகாப்புத் திட்டம்,
விலையில்லா அரிசி வழங்கும் திட்டம்,
விலையில்லா கறவைப்பசு வழங்கும் திட்டம்,
விலையில்லா ஆடுகள் வழங்கும் திட்டம்,
விலையில்லா மின்விசிறி, கிரைண்டர்,
மிக்ஸி வழங்கும் திட்டம்,

அம்மா உணவகம், அம்மா குடிநீர், அம்மா உப்பு,
அம்மா சிமெண்ட், அம்மா மருந்தகம்,
அம்மா குழந்தை நல பரிசுப் பெட்டகம்,
அம்மா மகப்பேறு சஞ்சீவி,
அம்மா முழு உடல் பரிசோதனை திட்டம்,

தாய்ப்பால் வங்கி, தொட்டில் குழந்தை திட்டம்,
திருக்கோயில் அன்னதானத் திட்டம்,
உலமாக்கள் ஓய்வூதியத் திட்டம்,
என எண்ணற்ற நலத்திட்டங்களை
ஏழைகளுக்காக வாரி வழங்கியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

**“நீ கடவுளைப் பார்த்தது கிடையாது– அவன்**
**கருப்பா ? சிவப்பா? தெரியாது.**
**இறைவன் ஒருவன் இருக்கின்றான்– இந்த**
**ஏழைகள் சிரிப்பில் தெரிகின்றான்”** என்ற
பாடலுக்கு மிகப் பொருத்தமானவர்
மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

**மாண்புமிகு பாரத பிரதமர் அவர்கள்**
**16.2.2018** அன்று டெல்லியில், நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்த பள்ளி மாணவ –மாணவியரின் தேர்வுகள் தொடர்பான விவாதத்தின் போது –

**தமிழ் மொழி சமஸ்கிருதத்தை விட பழமையானது, அதனை நான் கற்றுக்கொள்ளாதது எனக்கு வருத்தமளிக்கிறது எனவும், தமிழ் மொழி பல சிறப்புகளை** கொண்டது என தமிழ் மொழியை பாராட்டிப் பேசிய மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு தமிழ்நாட்டு மக்களின் சார்பாகவும், எனது சார்பாகவும் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

**I thank Hon'ble Prime Minister from my heart, on behalf of people of Tamil Nadu, for having praised the Tamil language as an ancient and beautiful language, in the recent, inter-action with students.**

தமிழ் நாட்டை **பசுமை மாநிலமாக மாற்ற மாண்புமிகு அம்மா அவர்கள்** பல்வேறு திட்டங்களை வகுத்தார்கள்.
வனப்பகுதியில் மட்டுமின்றி, வனத்திற்கு வெளியே இருக்கும் காலியிடங்களிலும், அதிக எண்ணிக்கையில் மரக்கன்றுகளை நட்டு – வளர்க்க மாபெரும் **மரம் நடும் திட்டத்தை** மாண்புமிகு அம்மா அவர்கள் தொடங்கினார்கள்.

மரம் நடும் திட்டத்திற்கு அரசே முன்னுதாரணமாக திகழவேண்டும் என்பதற்காக தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்ற முறையில் 2012 ஆம் ஆண்டு தன்னுடைய 64 வது பிறந்த நாளான பிப்ரவரி 24 ஆம் நாள் தொடங்கி டிசம்பர் மாதத்திற்குள் 64 லட்சம் மரக்கன்றுகளை நட உத்திரவிட்டு அதை செம்மையாக செயல்படுத்தினார்கள்.

அதைத் தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பிறந்த நாளில் மாபெரும் மரம் நடு விழா நடத்தி அந்த ஆண்டு முழுவதும் லட்சக்கணக்கான மரங்கள் நடப்பட்டன.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் 70 ஆவது பிறந்த நாளை கொண்டாடும் இந்த ஆண்டு முழுவதும், 70 லட்சம்

மரக்கன்றுகளை நடுவது என்ற இலக்கோடு இன்று கலைவாணர் அரங்க வளாகத்தில் முதலில் மரக்கன்றினை
மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள்
நட்டு தொடங்கியிருப்பது குறித்து மகிழ்ச்சியடைகின்றேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியோடும், அருளோடும் **16.2.2017**அன்று தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்பேற்ற நான் அன்றைய தினமே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்ட தேர்தல் வாக்குறுதிகளில், ஐந்து திட்டங்களுக்கான கோப்புகளில்தான் முதலில் கையெழுத்திட்டேன்.

நான் முதன்முதலில் கையெழுத்திட்ட
அந்த ஐந்து திட்டங்களில் முதல் திட்டமான
**“ அம்மா இரு சக்கர வாகனத் திட்டம்”**
தமிழ்நாட்டின் தலைமகளாகவும்,
தமிழ்த்தாயின் தவப்புதல்வியாகவும் திகழ்ந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்
பிறந்த இந்த நன்நாளில் **மாண்புமிகு**
**பாரத பிரதமர் அவர்கள் தங்கள் திருக்கரங்களால் தொடங்கி வைப்பதன் மூலம், இத்திட்டத்திற்கு மேலும் பெருமை சேர்க்கின்றனர்.**

இந்தத் திட்டத்தின் மூலம் வருடத்திற்கு ஒரு லட்சம் உழைக்கும் மகளிருக்கு இரு சக்கர வாகனம் வாங்குவதற்கு 50 சதவீதம் மானியம் இருபத்தைந்து ஆயிரம் ரூபாய் வரை வழங்கப்படும்.

இத்திட்டத்தினால் உழைக்கும் மகளிர்
சுதந்திரமாகவும், விரைவாகவும் தங்கள்
பணியிடங்களுக்கு சென்று வரவும், தங்கள் குழந்தைகளை பள்ளிக் கூடத்திற்கு அழைத்துச் செல்லவும், யாரையும் சார்ந்து இருக்காமல்
தங்களது அனைத்துப் பணிகளையும்
குறித்த நேரத்தில் செய்ய இயலும்.

**‘மங்கையராய் பிறப்பதற்கே**
**நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா’**
என்ற கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின்
பாடல் வரிகளுக்கேற்ப,

**மாதவம் செய்து பிறந்த மகளீரின் முன்னேற்றத்தில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்**
**அதிக அக்கறை கொண்டிருந்ததைப்போலவே,**

**இந்தியாவை மாபெரும் வல்லரசாக்கும் திட்டங்களை** வகுத்து விரைந்து செயலாற்றிக்கொண்டிருக்கிற
**மாண்புமிகு பாரத பிரதமர்**" அவர்களும்
மகளிரின் வளர்ச்சியில் அதிக ஈடுபாடு கொண்டு, பல்வேறு தொலைநோக்குத் திட்டங்களை
செயல்படுத்தி வருவதை இந்தியாவே பாராட்டுகிறது.

மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களால்
தொடங்கி வைக்கப்பட்டதால்
**"அம்மா இரு சக்கர வாகனத் திட்ட விழாவும்",**
வரலாற்றில் இடம் பெற்றுவிட்டது.
அதற்காக மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களுக்கு தமிழ்நாட்டு மக்கள் சார்பாக
மீண்டும் நன்றியை தெரிவித்துகொள்வதோடு,
இந்த பொன்னான வேளையில்,

மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களிடம்
ஒரு சிறு கோரிக்கையை தமிழ்நாட்டு மக்கள்
சார்பாக வைக்க விரும்புகிறேன்.

உச்சநீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில்
தமிழ்நாடே ஆவலோடு
எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்
**"காவேரி மேலாண்மை வாரியம்"**
(Cauvery Management Board) மற்றும்
**"காவேரி நீர் முறைப்படுத்தும் குழு"**
(Cauvery Water Regulation Committee)
ஆகியவற்றை உடனடியாக அமைக்க
உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ்நாட்டு மக்கள் சார்பாக அன்போடு
வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

Sir,

**I thank you very much for gracing the occasion of Amma's 70th Birthday and inaugurations the "Amma Two**

**wheeler Scheme" for working women and also the 'Massive Tree Planting Scheme' which are close to Amma's heart.**

**On this momentous occasion on behalf of the people of Tamil Nadu, I would like to request the Hon'ble Prime Minister to take speedy action to form the 'Cauvery management Board' and the 'Cauvery Water Regulation Committee' as per the directions of the Hon'ble Supreme Court.**

நன்றி!

வணக்கம்!

* * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 24.02.2018**